ADIC / IN / 1023 / 23-7-26

web
23/7/26

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
சமவாய்ப்பு பிரிவு
சுற்றறிக்கை

H8/NSP/EoC/DOTE/2026 **நாள் :** 10.07.2026

பொருள் : NSP - பீடி / தொழிலாளர் வாரிசுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் – 2026-2027 - இணையதளத்தில் மாணாக்கர்கள் விண்ணப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:- Higher Education (A2) Department Chennai – 9
Letter No.631/A2/2026-1, dated 12.06.2026

*******

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் பீடி/(Cine) தொழிலாளர்களின் குழந்தைகளின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மத்திய மற்றும் அரசுகளின் உதவியோடு கல்வி உதவித்தொகை திட்டத்தை செயல்ப் படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் பீடி தொழிலாளர்களின் குழந்தைகள் கீழ் கண்ட இணையதளம் மூலம் விண்ணப்பித்து உரிய உதவித்தொகை பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

புதிய மாணவர்கள் விண்ணப்பிக்கும் நடைமுறை NSP இணையதள இணைப்பு : https://scholarships.gov.in/

1. **ஒரு முறை பதிவு (OTR) உருவாக்குதல்**
   மாணவர்கள் முதலில் தேசிய கல்விஉதவித்தொகை இணையதளத்தில் (NSP) ஆதார் எண்ணைப் பயன்படுத்தி ஒரு முறை பதிவை (One Time Registration – OTR) மேற்கொள்ள வேண்டும். பதிவு நிறைவடைந்தவுடன் OTR எண் உருவாக்கப்படும். இவ் OTR எண் மாணவரின் பின் தொடர் கல்வியாண்டுகளுக்கும் செல்லுபடியாகும்.
2. **NSP இணையதளத்தில் உள்நுழைதல்**
   **OTR எண் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி NSP இணையதளத்தில் உள்நுழையவேண்டும். பின்னர் பீடி/Cine தொழிலாளர் கல்வி உதவித்தொகை திட்டத்தைத் தேர்வு செய்யவேண்டும்.**
3. **விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்தல்**
   **மாணவர்களின் விவரங்கள், கல்வி நிறுவனங்களின் விவரங்கள், பெற்றோர் அல்லது பாதுகாவலர் விவரங்கள் மற்றும் வங்கி கணக்கு விவரங்கள் ஆகியவற்றை கொண்டு விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.**
4. **ஆவணங்கள் பதிவேற்றம் செய்தல்**
   **மாணவர்களின் ஆதார் அட்டை வங்கி கணக்குப் புத்தகத்தின் நகல், பீடி/ தொழிலாளர் அடையாள அட்டை மற்றும் வருமான சான்றிதழ் ஆகியவற்றை பதிவேற்றம் செய்தல் வேண்டும்.**
5. **விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்**
   **அனைத்து விவரங்களையும் சரிபார்த்த பின்னர் விண்ணப்பத்தை இணையதளம் மூலம் சமர்ப்பிக்கவேண்டும.**
6. **விண்ணப்பங்களை புதுப்பிப்பதற்கான வழி காட்டுதல்கள்**
   **கடந்த வருடம் உதவித்தொகை பெற்ற மாணவர்கள் தங்களது முந்தைய உள்நுழைவு விவரங்களை பயன்படுத்தி** National Scholarship Portal – (NSP) **உள் நுழைந்து கல்வி தொடர்பான விவரங்கள் வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் வருமான சான்றிதழ் ஆவணங்கள் புதுப்பித்து இணையதளம் வாயிலாக சமர்பிக்கலாம்.**

பதிவாளர்

**பெறுதல் :**

1. புல முதல்வர்கள்
2. அனைத்துத் துறை தலைவர்கள் (தகவல் பலகைக்கு மற்றும் வகுப்புகளில் அறிவித்திட வேண்டப்படுகிறது)
3. இயக்குநர், அண்ணாமலைப் பல்கலைக்கழக எண்ணியல் தகவல் மையம் (இச்சுற்றறிக்கையை பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும்)
4. ஒருங்கிணைப்பாளர்கள், சமவாய்ப்பு பிரிவு
5. விடுதி ஒருங்கிணைப்பாளர் & அனைத்து விடுதி காப்பாளர்கள் (அனைத்து விடுதி அறிவிப்பு பலகையில் விளம்பரப்படுத்த வேண்டப்படுகிறது).

**நகல்:**

1. துணைவேந்தர் குழு நேர்முக செயலாளர்
2. பதிவாளர் நேர்முக உதவியாளர்
3. அலுவலக கோப்பு